# தமிழர் வரலாற்றில் நாடகக்கலையும் நடிப்புக்கலையும்

**முனைவர் க. கீதா**

**இணைப் பேராசிரியர் & தமிழ்த்துறை தலைவர்.**

**கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல், கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி,**

**கடலூர்.**

15

**ஆய்வுச் சுருக்கம்:**

நம் வாழ்வில் நாள்தோறும் கற்றுக்கொள்ளவதும் மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவதும் நடிப்பு என்று கூறுவர். வாழ்வில் தன் மனைவியிடமும் தன் பிள்ளைகளிடமும் நாம் நடந்து கொள்வதே நடிப்பு எனலாம் அதன் தொடக்கம் தன் நடிப்பு கலையும் ஆகும்.குடும்பத்தை தொடர்ந்து அவை சமூக மாற்றத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் துணை நின்றன. அது மக்களிடத்தில் கதை கருத்துபரிமாற்றமாக மாறியது. அதனைக் கொண்டு படித்தவர்களும், படிக்காதவர்களும் வரலாற்று செய்திகளையும் மற்றும் சங்க இலக்கிய சான்றுகளையும் நாடகத்தின் வாயிலாகவும் நடிப்பு கலையின் வாயிலாகவும் அறிந்துகொண்டனர். அவற்றின் தொடக்க சான்றுகளாக சங்க இலக்கியங்கள் வரலாற்று நூல்கள் புராண இதிகாசங்கள் போன்ற மறைந்த கதைகளை வெளிப்படுத்தும் ஊடகமாக நாடக நடிப்புக்கலை விளங்கியுள்ளது.அவற்றில் நடிப்பின் தன்மை, அவற்றின் வகைகள், நாடகத்தின் வகைப்பாடுகள், சங்க இலக்கியங்களாகக் கருதப்படும் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டில் நாடக சான்றுகள், காப்பியங்களில் நாடகச் சான்றுகள் வளர்ந்து வரும் நாடகக் கலைஞர்களின் முன்னோடிகள் தற்கால நாடக மாந்தர்கள் நலத்திற்கே வித்திட்ட நாடகதந்தை பற்றியும் இக்கட்டுரை ஆராயப்பட உள்ளது.

**திறவுச்சொல் :**

நாடகம், நாடகக்கலை, மழலைகளிடத்தில் நடிப்பு, ஆசான்.

**முன்னுரை:**

நம் நாட்டில் இன்று நாடகக்கலை சிறந்த முறையில் பல்வேறு மாறுதல் நிலையில் (தற்கால நாடகம்) வளர்ந்து வருகின்றன. நம்மைச் சுற்றியுள்ள பிற மாநிலங்களும் பிற நாடுகளும் போற்றிப் புகழ்கின்ற அளவுக்கு நம்நாட்டில் நாடகக்கலை முன்னேறி வருகின்றன. நாடகங்கள் அறுபது எழுபது ஆண்டுகளில் தமிழ்நாடக துறை அடைந்திருக்கும் உன்னதமான வளர்ச்சியைப் பார்க்கும்போது பெரும் வியப்பைத் தருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பாக இரண்டு அல்லது மூன்று தெருக்களில் பெட்டர்மாஸ் (கியாஸ்) லைட்டுகளை வைத்துக் கொண்டு நடித்த காலம் கடந்து, இன்று பல்வேறு விதமான வண்ண மின்விளக்குகளைக் கொண்டும் நாடகத்தில் புதிய புதிய மாற்றங்களை அமைத்துக் கொண்டும் நடித்துக் கொண்டும் வருகின்றனர். இதுப்போன்ற அருமையான சுவைமிகுந்த வரலாற்றை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நாடகத் துறையை நாம் அறியவேண்டிய அவசியமல்லவா? எனவே நாடகக் கலைத்துறையில் நடிப்புக்கலைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நாடகம் சொல் பொருள் விளக்கம்**

நாடகம் என்பது படிக்காத பாமரமக்களின் பல்கலைக்கழகம். மக்களின் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அவர்கள் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பின் எல்லையையும், அறிவையையும் வெளிபடுத்தி, மக்களின் பன்முக பார்வையில் பண்படுத்தும் மகத்தான கலையே நாடகக் கலை எனலாம்.

நாடு + அகம் = நாடகம் நாட்டை அகத்தில் (உள்ளத்தில்) கொண்டதே நாடகம். இந்நாடகங்கள் மூன்று காலத்திலும் நிகழ்ந்த, நிகழ்கின்ற, நிகழப்போகின்ற நடப்புக்களை தன் அகத்தே காட்டுவதால் நாடகம் என்று பெயர்ப்பெற்றிருப்பதை எடுத்துக் காட்டுகிறது. நாடகம் என்ற சொல்லுக்கு உன் உள்ளத்தை நோக்கு; முதலில் உன்னையுணர்; உன்னகத்தை நாடு; என்றெல்லாம் பலவிதமாக அறிஞர்கள் பொருள் கூறுகிறார்கள். நாடகத்தின் இலக்கணம் என்று சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் "நாகம் உலக நிகழ்ச்சிக்களைக் காட்டும் கண்ணாடி என்றும், உள்ளத்தின் உணர்வுகளைத் தூண்டும் உள்ளக் கண்ணாடி" என்று சொன்னாலும் கூட முற்றிலும் பொருத்துமாகவே அமையும் எனலாம்.

**நாடகத்தில் மூவகை உணர்ச்சிகள்**

மனிதனுக்கு இயல்பாக மூன்று வகையுணர்ச்சிகள் உண்டாவதை அறியமுடிகின்றன. அவற்றுள் ஒன்று பசியுணர்ச்சி, இரண்டாவது ஆண்- பெண் மீதான பால் உணர்ச்சி; மூன்றாவது உடல் இயக்கத்தைச் சார்ந்த ஆரோக்கியமான இயக்கத்திற்குத் தேவையான விளையாட்டுவுணர்ச்சி எனலாம். மனிதன் நம்மைப்போன்ற பிறர் செய்வதைப்போல் நாமும் அந்நிகழ்வைச் செய்துகாட்ட வேண்டுமென்ற உணர்ச்சியானது சிறுவயது (குழந்தைப்பருவம்) முதலே நம்மிடத்தில் இருந்து வருகின்றன. இதுபோன்ற பல்வேறு விளையாட்டுணர்ச்சியிலிருந்து தோன்றி எழுந்தவை தான் நாடகம். எப்படி என்றால் ஒருவர் செய்யும் விளையாட்டு உணர்ச்சியைப் பார்த்து குழந்தையும் அவர்களைப்போன்றே நாமும் செய்ய வேண்டும் என்ற ஒரு கலையானது அக்குழந்தையை இயக்கவைக்கிறது.

**நாடக வகைகள்**

தமிழ் நாடகங்களை பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை புராண நாடகம், இதிகாச நாடகம், வரலாற்று நாடகம், கற்பனை நாடகம், பக்தி நாடகம், இலட்சிய நாடகம், சமுதாய நாடகம், சமுதாயச்சீர்திருத்த நாடகம், தேசிய நாடகம், நகைச்சுவை நாடகம் இவற்றோடு இக்காலத்தில் வீதிநாடகம், பிரச்சார நாடகம் என்னும் பிரிவையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**இலக்கியங்களில் நாடகச் சான்றுகள்**

ஏறத்தாழ பல ஆண்டுகளுக்கு முன்பு நாடகமேடையில் ஆட்டமும் பாட்டும் தான் இருந்து வந்தன. அதேபோல் பெரும்பாலும் முன்பெல்லாம் நாடகத்தையும், நாட்டியத்தையும் வெவ்வேறாக யாரும் கருதவில்லை என்பது புலனாகிறது. காப்பிய இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலன், கண்ணகி இவர்களின் திருமணத்தின் போது நாட்டியம் ஆடும் மாதவியை

"நாடகமேத்தும் நாடகக் கணிகை" (சிலம்பு –பதிகம் 15)

என்று குறிப்பிடுவதை நன்கு அறியமுடிகிறது. அதோடு மட்டும் அல்லாமல் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் தம் உரையில் கூத்துவகைகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரம் மட்டும் அல்லாமல் தொல்காப்பியன் காலத்திலேயே நாடகம் இருந்தது என்பதனை

"நாடக வழக்கிலும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்" (தொல்-பொருள் -56)

தொல்காப்பியர் நாடகத்தைப் பற்றித் திறம்பக் கூறியுள்ளார்.

**தொடக்க கால நாடக நூல்கள்**

நாடகக்கலை தமிழ்மொழியோடு இணைந்துவிட்ட ஒரு நற்கலையே எனலாம். சுவாமி

விபுலானந்தர் அவர்களால் மதங்க சூளாமணி' என்னும் தமிழ் நூலானது நாடகம் பற்றிய ஆராய்ச்சி நூலாகும். மறைமலையடிகளாரின் 'சாகுந்தலம்' என்ற நூல் குறிப்பிடத்தக்கதே. இசைத் தமிழ் வரலாறும் தமிழில் மிக நீண்டதொன்றாக அமைகிறது. இவற்றைவிட சுவாமி விபுலானந்தரின் யாழ்நூல்' நாடக இசைத்தமிழ் நூலில் சிறந்ததொன்றே எனலாம். இறையனார் அகப்பொருளுரையில் நாடக இசைத்தமிழ் நூல்கள் என்று நோக்கும்போது முதுகுருகு, முதுநாரை,களரியாவிரை, சிற்றிசை, பேரிசை, பெருநாரை, பரிபாடல், பெருங்குருகு, பஞ்சமரபு, பஞ்ச பாரதியம், தாள சமுத்திரம், கச்சபுடவெண்பா, இசைநுணுக்கம், தாளவகையோத்து என பல நூல்களை அறிய முடிகின்றன. பரிபாடலில் கிடைக்கப் பெற்ற இருபத்திரண்டு பாடல்களில் இசைப்பண்ணும் இசையமைத்தவர் பெயரையும் குறிக்கப்படுகின்றன. இசையின் ஏழுவகையான நிலைகள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் முதலியவைப் பற்றி காப்பியநூலான சிலப்பதிகாரத்தை 'தமிழிசை இலக்கண நூல்' என்று போற்றப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பல்லவர்காலம் என்று அழைக்கப்படுகின்ற இடைக்காலத்தில் இசையெடு தமிழ்பரப்பிய தேவாரம், திருவாசகம், பண்முறைப்படி தொகுக்கப்பட்டுள்ளவை. திருப்புகழ்ப்பாடிய அருணகிரிநாதரும் இசைத்தமிழை வளர்த்தார். நாயக்கர் காலத்தில் கீர்த்தனைகளையே பாடும் கருநாடக இசையை உருக் கொண்டது. வடலூர் வள்ளாருமான இராமலிங்கர், சென்னிகுலம், அண்ணாமலை செட்டியார் அவர்களும், குணங்குடி மஸ்தான் சாகிபு, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், கவிக்குஞ்சர பாரதி, முத்துத்தாண்டவர் போன்றோர் இசைத் தமிழுக்கு அரும் தொண்டாற்றினர்.

**நாடக கலையின் முன்னோடிகள்**

நாடகம் என்று சொன்னாலே இருபதாம் நூற்றாண்டில் நாடகத்துறைக்காக பணிப்புரிந்து தமிழ்நாடகத்தை மேலும் சிறக்கச் செய்தவர் என்றுச்சொன்னால் சங்கரதாஸ் சுவாமி எனில் மிகையில்லை அவர்களுக்க மிகையாகாது. மேலும் அவர் இயற்றிய பக்த பிரகலாதன், சிறுதொண்டர், பவளக்கொடி, லவகுசா இதுபோன்ற நாற்பது நாடகங்களை இயற்றி மேடை ஏற்றியுள்ளார். இவருடைய நாடகங்களில் நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களடங்கிய “அபிமன்யூ" என்ற நாடகத்தை ஒரே இரவில் எழுதினார் என்றால் இவருடைய படைப்பாற்றலுக்கு சொல்லவும் வேண்டுமா? இவரை தமிழ் நாடகத்தின் "பேராசான்" என்று போற்றப்படுகின்றனர். நாடகத்கந்தை என்று போற்றப்படும் பம்மல் சம்மந்த முதலியார் தமிழ்நாடக வளர்ச்சியில் புதியதொரு மாற்றத்தையும், வளர்ச்சி நிலையில் ஒரு திருப்பத்தையும் ஏற்படுத்தினார். இவருடைய நாடகங்களால் மக்கள் வாழ்க்கையைப் பற்றி பின்பற்றியுள்ளனர். "சுகுண விலாச சபா" என்ற அமைப்பின்மூலம் பால நாடகங்களை அரங்கேற்றினார். புஷ்பவல்லி' என்ற நாடகம் முதல்முதலில் எழுதி நடித்த நாடகமாகும். இவர் தொண்ணூறு நாடகங்கள் வரை எழுதியுள்ளார். இரத்தனாவளி, மனோகரா, இரண்டு நண்பர்கள், கள்வர் தலைவன், வேதாள உலகம் முதலிய நூல்கள் புகழ்பெற்றவை. அதோடு மட்டுமல்லாமல் ஆங்கிலத்தில் உள்ள சேக்ஷ்பியர் நாடகங்களையும், வடமொழி நாடகங்களையும் தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார்.

**இக்கால இலக்கியத்தில் நாடகப் பணி**

பாரதியார், கவிமணி தேசிக விநாயகப்பிள்ளை, பாரதிதாசன். யோகி சுத்தானந்தபாரதி இது போன்ற இன்னும் பல சான்றோர்கள் தமிழ்இசைப் பாடல்களைப் பாடியுள்ளனர். 1943ல் அண்ணாமலையரசர் தமிழ் இசை இயக்கத்தைத் தொடங்கி இசைவளர்ச்சிக்கு புத்துயிர் தந்தார். ஆர்.கே. சண்முகஞ் செட்டியார், கோவை எஸ். இரத்தின சபாபதி முதலியார், இரசிகமணி டி.கே.சி, கல்கி ஆகியோர் தமிழிசை இயக்கத்திற்கு முன்னின்று செயல்படுத்தினர். அரசர் முத்தையவேள், அவர்கள் மதுரை தமிழிசைச் சங்கத்தை வளர்த்தவராவார்.

**மழலைகளிடத்தில் நடிப்பு**

பெரியவர்கள் என்ன செய்கின்றார்களோ அதேபோன்று குழந்தைகள் வீடுகட்டி விளையாடுவது, கல்யாணம் செய்து விளையாடுவது நம்மால் பார்க்க முடிகிறது அல்லவா? இல்லத்தரசிகள் அதாவது தாய்மார்கள் சோறுசமைப்பதைப் பார்த்து குழந்தைகளும் விளையாட்டு பொருட்களை வைத்து மண்ணையும் சிறு இலைகளையும் அள்ளிப்போட்டு சமையல் செய்து விளையாடுவதைப் பார்க்க முடிகின்றது. அதொடு மட்டும் அல்லாமல் நடைமுறை வாழ்க்கையில் எத்தகையே பேர்கள் அபூர்வமாக நடிக்கிறார்கள். இவற்றை எல்லாம் எந்த போகக்கூடத்தில் நடிக்கக் கற்றுக் கொண்டார்கள் ? எனவே இவற்றைப் பார்க்கும்போது நடிப்பு என்பது எல்லோரிடமும் இருந்து வருகின்ற ஒன்றாகும்.

**மொழிப் பேசுவதில் நடிப்பு**

மனிதன் மொழியை அவரவர்களுடைய மொழியில் பேச தொடவதற்கு முன் நடிப்பின் மூலம் தானே (சைகை மொழி) தமது எண்ணங்களை வெளிப்படுத்தி இருக்கவேண்டும். உதாரணமாக தமிழ்மொழித் தெரியத பிறமொழியாளர்களிடத்தில் பேசவேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது நாம் என்ன செய்கின்றோம், நம்முடைய சைகை நடிப்புத்தானே நம்மைகக் காத்து உதவிபுரிகிறது. சான்றாக சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையில் நடிப்பிற்குரிய செய்யுள்கள் காணக்கிடைக்கின்றன. எண்வகை மெய்பாடுகளான நகை, உவகை, பெருமிதம், வெகுளி, வியப்பு, அவலம், அச்சம், வெறுப்பு, சமநிலை ஆகிய குறிப்புகள் எப்படி வெளிப்படுத்த வேண்டுமென்பதற்குரிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**நாடகாசிரியரின் அவசியம்**

நாடகத்துறையில் ஒவ்வொரு நாடகக்குழுவிற்கும் ஒரு நல்ல ஆசிரியர் இருக்க வேண்டும். நாடகக் கலைத்துறைக்கே ஒரு பெரிய புண்ணியத்தைச் செய்கின்றவன்தான் நாடக ஆசிரியன், நாடக ஆசிரியர் மீது நடிகர்கள் அனைவரும் அவர்மீது பெருமதிப்பு வைத்துள்ளனர். நடிக்கும் போது சந்தேகங்கள் வந்தால் ஆசிரியரிடத்தில் கேட்டுச் செயல்பட வேண்டும். ஆசிரியர் எண்ணப்படித்தான் நடிக்க வேண்டும். நடிகனுக்கு புதிய கற்பனைகள் எதாவது தோன்றகூடும். அவ்வாறு தோன்றினாலும் கூட அதை ஆசிரியரிடம் கூறி இந்தக் காட்சியில் இப்படி நடிக்கலாமா? இந்தக் கட்டத்தில் இப்படிபேசலாமா? என்றுக்கேட்டுதான் செயல்பட வேண்டும். எனவே நாடக ஆசிரியன் நாடகத்தின் ஒவ்வொரு குழுவிற்கும் அவசியமே.

**முடிவுரை**

நம்நாட்டில் நாடகக்கலை தமிழினத்துக்கேயுரிய ஒரு தொன்மையான கலையாகும். நாடகத்தின் பல்வேறு விதமான வகைப்பாடுகள் பற்றியும் கட்டமைப்புகள் பற்றியும், நாடகத்தைப் பற்றி பேசும்

உணர்ச்சிகள் பற்றியும், இலக்கண இலக்கிய சான்றுகளையும் எடுத்தியம்புகிறது. காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், கவிதையிலக்கியம் கூறும் சிறப்புகள் பற்றி அறியலாகின்றன. நாடகத் துறைக்கே வித்திட்ட நாடகத் தந்தைப் பற்றியும், நாடக ஆசான் செய்த தொண்டுகள் பற்றியும் மற்றும் பல ஆன்றோர்கள் நாடகத் துறைக்கு வித்திட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

**சாண்றோன் விளக்கம்:**

1. (சிலம்பு –பதிகம் 15)
2. (தொல்-பொருள் -56)